பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 13 ஞாயிற்றுக்கிழமை 29.09.2024 கதிர் 326

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடந்தபோது, ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவுக்கு மாறாகச் செயற்பட்ட ☞ 2

## வீட்டுச் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள

# புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகளுக்கு தமிழ் அரசு அழைப்பு

### அவை முன்வராவிட்டால் தனித்துப் போட்டி

தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும் வீட்டுச் சின்னத்தின் கீழும் சேர்ந்து போட்டியிடுவதற்கு முன்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக முன்னர் செயற்பட்டுப் பின்னர் வெளியேறிய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது தமிழ் அரசுக் கட்சி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய ஈபிஆர்எல்எவ், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளுக்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் ☞ 2



## சாதாரண தர பெறுபேறுகள் வெளியாகின

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தங்களது பெறுபேறுகளை doenets.lk மற்றும் results.ex- ☞ 8

## முன்னாள் ஆளுநர் நஸீர் தேர்தலில் தனித்துப் போட்டி

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அவரது ஜனநாயக ஐக்கிய முன்னணி சார்பில் களமிறங்கவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், முன்னாள் சுற்றாடல் அமைச்சர் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் பதவிகளை வகித்த நஸீர் அஹமட், கிழக்கு மாகாணத்தை பூர்வீகமாக கொண்டவர். கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் அவர் ஜனநாயக ஐக்கிய முன்னணி எனும் பெயரிலான அரசியல் கட்சியை வைத்துள்ளார். ☞ 8

## 7 தமிழ்க் கட்சித் தலைவர்களை இன்று சந்திக்கிறார் இந்திய தூதர்

வடக்கு, கிழக்கை மையப்படுத்திய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை நாளை திங்கட்கிழமை இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் பிற்பகல் மூன்று மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்குமாறு, தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா உள்ளிட்டவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ள நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் நவம்பர் 14 ☞ 8

## ஈ – விசா மோசடி குறித்து விசாரணை விரைவில்

வெளிநாட்டு நிறுவனத்திற்கு விசா செயலாக்கத்தை அவுட்சோர்சிங் செய்வதில் சர்ச்சைக்குரிய 'ஈ -விசா' மோசடி குறித்து ஆளும்தரப்பு விசாரணையைத் தொடங்க உள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து வெளிநாட்டு கூட்டமைப்பை விலக்கி, ஆன்லைன் விசா விண்ணப்ப தளத்தை ஆளும்தரப்பு மீட்டெடுத்தது.

ஈ - விசா ஒப்பந்தத்திற்கு அனுமதி வழங்கும் அமைச்சரவையின் முடிவுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கும் நிலையில் இந்த விசாணை தொடங்கப்படவுள்ளது.

ஈ- விசா வழங்கும் ஒப்பந்தம் வெளிப்படையாக, பகிரங்க கேள்வி கோரல் மூலம் வழங்கப்படவில்லை என்றும், இந்த ஒப்பந்தம் மூலம் நாட்டிற்கு பெரும் வருமான இழப்பு ஏற்படுகின்றது என்றும் தெரிவித்தனர்.

ஏப்ரல் 17ஆம் தேதிக்கு முன் இருந்த அளவுகோலின்படி, 'ஆன்-எரைவல்' எனப்படும் வருகையின் போதான விசாக்களை வழங்குவதற்கான மின்னணு பயண அங்கீகாரம் (ETA) ☞ 2

## முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை உடனே சீரமைக்க ஆளும் தரப்பு முயற்சி

### அவற்றை நிறுத்த சட்டத் திருத்தங்கள் தேவை என்பதால்

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் சலுகைகளை ஒரு அளவுகோலின்படி சீரமைக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாக உயர்மட்ட வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது. ☞ 2

## அரச நிதி வீண் விரயம் தொடர்பில் ஆளும்தரப்பு உன்னிப்பாக கவனம்

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

அரச நிதி வீண் விரயம், துஸ்பிரயோகம் குறித்து ஆளும்தரப்பு மிக உன்னிப்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்களை கண்டறிய ஒழுங்கான வேலைத்திட்டத்தை அரசு தயாரித்துள்ளதாகவும் பிரதமர் நேற்றுத் தெரிவித்தார்.

விளையாட்டு மற்றும் ☞ 8

## பாடசாலை விசேட நிகழ்வுகளுக்கு பெற்றோரிடம் பண அறவீடு கூடாது

### கல்வி அமைச்சு அறிவிப்பு

பாடசாலைகளில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளுக்குப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடக் கூடாது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள், வலய கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் இடம்பெறும் சிறுவர் தினம், ஆசிரியர் ☞ 8

## மக்கள் நலத் திட்டங்கள் தொடர்வதை தேர்தல் ஆணைக்குழு தடுக்கக் கூடாது

### முன்னாள் அமைச்சர் காஞ்சனா வலியுறுத்து

தமது ஆட்சியில் முன்னெடுக்கப்பட்டு தற்போதைய ஜனாதிபதியினால் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கான எரிபொருள் மானியத் திட்டம் மற்றும் இந்திய சோலர்களைப் பகிர்ந்தளிக்கும் திட்டம் ஆகியவற்றை, நாடாளுமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி தேர்தல் ஆணைக்குழு தடுத்து நிறுத்தக்கூடாது என்று முன்னாள் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆளும்தரப்பினால் தொடங்கப்பட்ட பல வேலைத்திட்டங்களை மீள முன்னெடுப்பதற்குத் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தீர்மானித்துள்ளார். குறிப்பாக கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானியம், உர மானிய தொகை அதிகரிப்பு மற்றும் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சூரிய படலங்களைப் பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதித் தேர்தல் வந்ததால், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அவை நிறுத்தப்பட்டன. ☞ 8

## இனக் குரோதங்களை வளர்க்காது பொது தேர்தலை எதிர்கொள்ளுங்கள்

### அரசியல் கட்சிகளிடம் உண்மை, நல்லிணக்க மன்றம் கோரிக்கை

இனங்களுக்கு இடையில் குரோதங்களையோ முரண்பாடுகளையோ ஏற்படுத்தாத வகையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு உண்மைகளை வெளிப்படுத்திய தார்த்த பூர்வமான வாக்குறுதிகளை வழங்கி இந்தத் தேர்தலில் அரசியல் தலைமைகள் தங்களுக்கான தேர்தல் தளத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று வவுனியா மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் கோரிக்கை விடுத்து கட்சித் தலைவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது. கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை தேசம் தற்போது மீண்டும் ஒரு தேர்தலை எதிர்நோக்கி இருக்கிறது. மக்கள் தங்களுக்கான சட்டவாக்க சபைக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்கின்ற இந்த தீர்க்கமான காலகட்டத்தில் அரசியல் தலைமைகளும் ஜனநாயக ரீதியானதும் காலச்சூழலுக்கு ஏற்றதுமான முடிவுகளை எட்டவேண்டிய தருணத்தில் உள்ளார்கள்.

இந்த களச்சூழலில் உண்மை மற்றும் நல்லிணக்க மன்றமாகிய நாம் தமிழ் மக்கள் மத்தியில் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எட்டப்பர் கூட்டம் தொடர்பான வாதப் பிரதிவாதங்களால் அந்தத் தனியார் விடுதியே அதிர்ந்தது. கூட்டம் நடந்த அறைக்கு வெளியே இருந்தவர்களாலேயே கேட்க முடிந்தளவுக்கு பெருங் குரலில் வாய்ச் சண்டை இடம்பெற்றுள்ளது. இருந்தாலும், நான் முன்னரே கோடிகாட்டி வந்ததைப் போன்று எட்டப்பர் கூட்டத்தில் எவரையும் கட்சியில் இருந்து வெளியேற்றும் -முடிவு எடுக்கப்படவில்லை. கட்சியைவிட்டு உடனடியாகத் தூக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனிடம்கூட மீண்டும் ஒரு விளக்கம் கேட்பது என்று தீர்மானித்து யாரையும் கட்சியைவிட்டுத் துரத்தும் முடிவு எடுக்கப்படவில்லை. அப்படிச் செய்வது நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் கட்சிக்குக் கிடைக்கும் வாக்குகளில் சரிவை ஏற்படுத்தக்கூடுமோ என்று சிலர் அஞ்சுவதே அவர்களைக் கட்சியைவிட்டுத் துரத்தாமல் இருப்பதற்கான காரணம். ஆனால், இந்த எட்டப்பர் அணியைச் சேர்ந்தவர்களுக்கு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புவழங்காமல் இருப்பதற்கான அச்சாரம் போடப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டம் நீண்ட நேரம் நடந்தது. காலை 10 மணிக்குத் தொடங்கிய கூட்டம் மாலை 5.30 மணிக்குத்தான் முடிவடைந்தது. தொடங்கியதில் இருந்தே ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக்குத் துரோகம் இழைத்த எட்டப்பர் அணிக்கு எதிராக சரமாரியான கணைகள் பாய்ந்தன. கட்சியின் கொழும்புக் கிளை உறுப்பினர் இரத்தினவடிவேல்தான் தாக்குதலைத் தொடக்கி வைத்தார். அதைத் தொடர்ந்து சரமாரியாக ஒவ்வொருவரும் போட்டு வாங்கினர். கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு எதிராக அவரது முகத்துக்கு நேராகவே கண்டன மழை பொழிந்தது. அதனாலேயோ என்னவோ எல்லாத் தாக்குதல்களையும் தன் தலையில் போட்டுக்கொண்டு அவசர அவசரமாக அவற்றுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார் தலைவர். மற்றவர்கள் தலைவரை தனியே சமராட விட்டுவிட்டுப் பதுங்கிவிட்டனர்.

கட்சியின் முடிவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் செயற்பட்டவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்தும் காரசாரமான விவாதம் நடந்தது. தமிழ் மக்களுக்காக, கட்சியின் சார்பில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தனக்கெதிராகக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதா என்ற சாரப்படவே தலைவர் மீண்டும் மீண்டும் தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க முயன்று கொண்டிருந்தாராம். ஆனாலும் மத்திய செயற்குழு அவரது கருத்துக்குச் செவிசாய்ப்பதாக இல்லை. எட்டப்பர் அணியினர் அனைவரிடமும் கட்சி முடிவை எதிர்த்து அவர்கள் செயற்பட்டது தொடர்பாக விளக்கம் கேட்பதன் மூலம் ஒழுக்காற்று நடவடிக்கையைத் தொடங்குவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

யார் யாரிடம் விளக்கம் கேட்பது என்பதை கட்சியின் செயலாளர் தீர்மானிப்பார் என்றும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, கட்சித் தீர்மானித்திற்கு எதிராகச் செயற்பட்டு வேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் மற்றும் ரணிலுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தவர்கள் அனைவரிடமும் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் விளக்கம் கேட்பார். குறிப்பாக அரியநேத்திரனுக்கு ஆதரவாக மேடைஏறி வாக்குக் கேட்டவர்களிடம் இருந்து கட்டாயம் விளக்கம் கேட்கப்படும். அத்தோடு அரியநேத்திரனிடம் இருந்து மீண்டும் ஒரு விளக்கத்தைக் கேட்பதற்கும் கட்சி தீர்மானித்துள்ளது.

தமிழ் அரசுக் கட்சியில் இருந்தபடியே தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட முன்வந்தமை குறித்து அவரிடம் கட்சி விளக்கம் கேட்டிருந்தது. அதற்கு அவர் ஒரு விளக்கத்தை மிகத் தாமதமாக அனுப்பி வைத்திருந்தார். அந்த விளக்கத்தைக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று ஏற்றுக்கொள்ளவில்லை. அதேசமயம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து உடனடியாக விலகும்படி கட்சி அவரிடம் கோரி இருந்தது, அதனை ஏற்றுக்கொள்ளாமல் அவர் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். அது குறித்தே அவரிடம் மீண்டும் விளக்கம் கோருவது என்று நேற்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் கட்சியின் எட்டப்பர் அணியினரில் எவரும் கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

அதேநேரம், இந்தக் காரணத்தை முன்வைத்துக் கட்சியின் வேட்பாளர் தெரிவில் அவர்கள் புறக்கணிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தீர்மானிப்பதற்கான குழு ஒன்று நேற்று நியமிக்கப்பட்டது. இந்தத் தேர்வுக் குழுவில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் சத்தியலிங்கம், பேச்சாளர் சுமந்திரன், மட்டக்களப்புக் கிளைத் தலைவர் சாணக்கியன், துணைத் தலைவர் சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், சேர்ந்த ரஞ்சினி, சேர்ந்த சேயோன், துரைராஜசிங்கம், குருகுலராஜா, குகதாசன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்தக் குழுவிற்குள் சுமந்திரன் தரப்பினரின் கையே ஓங்கியிருக்கிறது. மற்றைய தரப்பில் மாவை, குருகுலராஜா, குதாசன் என்று மூன்று பேர் மட்டுமே இருக்கின்றனர். அதனால், கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்பட்ட எட்டப்பர் அணியினருக்கு நாடாளுமன்றத் தேர்தலில் வாய்ப்புக் கிடைப்பது துர்பலமே! பாவம் அவர்கள் பொதுக் கட்டமைப்பு, ஒற்றுமை என்பவற்றை நம்பப்போய் இன்று பொதுக் கட்டமைப்பும் இல்லாமல் கட்சியும் இல்லாமல் நடுத்தெருவில் நிற்கவேண்டியவர்களாகிப் போயினர்.

இந்த விவகாரம் தெரிந்தோ என்னவோ தாம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று தலைவர் மாவை சேனாதிராசாவும் சிரேஸ்ட துணைத் தலைவர் சிவஞானமும் கூட்டத்தில் கோடி காட்டினர். அந்த முடிவில் அவர்கள் உறுதியாக இருப்பார்களா என்பது அடுத்த சில நாட்களிலேயே தெரியவந்துவிடும். பார்க்கலாம். இதற்கிடையே சுமந்திரன் தேர்தலில் போட்டியிடுவதற்கும் ஒரு 'செக்' வைக்கும் வகையில் ஏற்கனவே இரண்டு மூன்று தடவைகள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டவர்களுக்கு இனிவரும் தேர்தல்களில் வாய்பளிக்கக்கூடாது என்னும் தீர்மானம் ஒன்றும் நேற்று நிறைவேற்றப்பட்டது. இதைச் சமாளித்து சுமந்திரன் எப்படி இந்தத் தேர்தலில் போட்டியிடக் களமிறங்குகிறார் என்பதையும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

.....................

தமிழ் அரசுக் கட்சியின் தலைமையில் அதன் வீட்டுச் சின்னத்தில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வருமாறு புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகளுக்கு விடுக்கப்பட்ட அழைப்புக் குறித்து அந்தக் கட்சிகள், குறிப்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இன்று கலந்துபேசி ஒரு முடிவை அறிவிப்பார்கள் என்று தெரிகிறது. தமிழ் அரசுக் கட்சியின் அழைப்புக்கு என்ன பதில் என்று இந்தக் கட்சிகளின் தலைவர்களிடம் நேற்றுக் கேட்ட செய்தியாளர்களுக்கு தாம் இன்று இது குறித்து ஆராய்ந்துவிட்டுப் பதிலளிப்போம் என்று அவர்கள் பதிலளித்துள்ளார்கள்.

பொதுக்கட்டமைப்பின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதா இல்லையா என்று அந்த அமைப்பில் சம அதிகாரத்தைக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையினரின் முடிவும் இன்றே வெளியாகும் என்று தெரிகிறது. இது விடயம் தொடர்பாகப் பேசி முடிவு செய்வதற்குத் தமக்கு இரு நாள்கள் கால அவகாசம் தேவை என்று பொதுச் சபையினர் கேட்டிருந்தனர். என்றாலும் அவர்களும் இன்று காலையே கூடி இது தொடர்பில் ஒரு முடிவை அறிவிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. பொ-துக் கட்டமைப்பாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதில்லை என்பதே பொதுச் சபையினரின் முடிவாக இருக்கும் என்று உள்வீட்டுத் தகவல்கள் சில தெரிவிக்கின்றன.

எனவே பொதுச்சபையினரின் முடிவையும் அறிந்த பின்னர் தமிழ் அரசுக் கட்சியோடு சேர்ந்துகொள்வதா இல்லையா என்பது குறித்து மூன்று கட்சிகளும் தமது முடிவைத் தெரிவிக்கும். அதற்கிடையில் இந்தக் கட்சிகளை நாடாளுமன்றத் தேர்தலில் ஒருங்கிணைத்துப் போட்டியிட வைக்கும் நோக்கத்துடன் அவற்றைச் சந்திப்பதற்கு இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அழைப்பு விடுத்துள்ளார். கொழும்பில் இன்று இந்தச் சந்திப்பு இடம்பெறுகின்றது. இந்தக் கூட்டத்திற்கு 7 கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் பங்குபற்றமாட்டார்கள். சுமந்திரனும் கூட்டத்திற்குச் செல்லமாட்டார் என்று தெரிகிறது. ஆகமொத்தத்தில் ஒற்றுமைக்கான இந்தக் கூட்டமும் பிசுபிசுத்துப் போகும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியத் தூதுவர் ஒற்றுமை பற்றி அழுத்தம் கொடுத்தால், தமிழ் அரசுக் கட்சியே கூட்டமைப்பில் இருந்து வெளியேறியது, நாங்கள் இன்னமும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம், அதனால் தமிழ் அரசுக் கட்சி வந்து தங்களோடு சேர்ந்துகொள்ளலாம் என்கிற புராணத்தையே அங்கு பாடுவதற்கு ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் தரப்பிலும் ஆயத்தங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தியத்தூதுவரின் இந்த வேண்டாத ஒற்றுமை நாடகத்தில் சிக்கிக்கொள்ள விரும்பாததாலேயே தமிழ் அரசுக் கட்சியின் தலைமையில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடத் தயாராக இருந்தால் வாருங்கள் என்று தமிழ் அரசுக் கட்சி நேற்று அவசரமாக அறிக்கை விட்டது என்றும் தெரிகிறது.

ஜேவிபிக்கு எதிராக தமிழ்க் கட்சிகளை ஒருபுறத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியையும் மறுபுறத்திலும் ஒன்றிணைக்க இந்தியத் தூதரகம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் இரண்டும் தோல்வியிலேயே முடிவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. வென்றால் பிரதமர் பதவி தோற்றால் எதிர்க் கட்சித் தலைவர் பதவி என்பதில் சஜித் பிரேமதாச பிடிவாதமாக இருப்பதன் காரணமாக அந்தக் கூட்டுக்கான முயற்சியும் தோல்வியில் முடிந்துவிட்டது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புளொட் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் இணைந்து போட்டியிடும் வகையில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள 'நெல்லி ஸ்ரார்' தனியார் விடுதியில் நேற்றுக் காலை பத்து மணிமுதல் மாலை 5.30 மணிவரையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் இறுதியில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மற்றும் பேச்சாளர் ஆகியோர் கட்சியின் இந்த முடிவை அறிவித்தனர்.

மத்திய செயற்குழுவின் முடிவுகள் குறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரான விடயங்கள், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

### விளக்கம் கோரல்

ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சி எடுத்த தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்களிடத்தில் விளக்கம் கோருவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கட்டமைப்பினரின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட அரியநேத்திரனை கட்சியிலிருந்து விலக்க வேண்டுமென்று கருத்துகள் வெளியிடப்பட்டபோதும் அவரிடம் மீண்டும் ஒரு விளக்கம் கேட்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் இருந்து உடனடியாக விலகுமாறு எமது கட்சி அவரைக் கோரியிருந்தது. ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. எனவே அது குறித்தும் அவரிடம் விளக்கம் கேட்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரியநேத்திரனிடம் விளக்கம் கேட்டு கட்சியால் முதலில் அனுப்பப்பட்ட கடிதத்திற்கான அவருடைய கடிதம் காலம் தாழ்த்தப்பட்டு வந்தாலும் அக்கடிதமும் மத்திய செயற்குழுவில் அதுவும் வாசிக்கப்பட்டது.

இந்நிலையில், அரியநேத்திரனிடம், விளக்கமொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவரைக் கட்சியை விட்டு வெளியேற்றுவது தொடர்பான தீர்மானத்தினை எடுக்கலாம் என்று முடிவெடுத்துள்ளோம்.

### நாடாளுமன்றத் தேர்தல்

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக விசேட அறிவிப்பொன்றை தமிழ் அரசுக்கட்சி விடுப்பதற்கு ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக செயற்பட்டு வெவ்வேறு காலங்களில் பிரிந்து சென்ற கட்சிகளை மீண்டும் ஒன்றிணையுமாறு நாம் இருகரம் நீட்டி, மனமுவந்து வரவேற்கின்றோம்.

கடந்த காலத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில், தமிழ் அரசுக் கட்சியின் தலைமையில் எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டதோ அதேபோன்று மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுவதற்காக நாம் இன்முகத்துடன் வரவேற்கின்றோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் சவால் மிக்கதாக உள்ளது. ஆகவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய தரப்பினர் இணங்கிவந்து மீண்டும் எம்முடன் இணைந்து இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும் என்று நாம் விநயமாகக் கோருகின்றோம்.

எமது அழைப்பினை அவர்கள் ஏற்று வருகின்ற பட்சத்தில் அவர்களுடன் விரைவில் பேச்சுக்களை முன்னெடுத்து தேர்தலில் வேட்பாளர்களை எவ்வாறு நிறுத்துவது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும். ஒக்டோபர் 4 வேட்புமனுத் தாக்கல் தொடங்குவதால் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் அவர்களின் முடிவு தெரியவேண்டிய அவசரம் இருக்கின்றது.

அவர்கள் எமது அழைப்பினை ஏற்று இணங்கி வராது விட்டால் நாம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாகத் தனித்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### தனிக் கவனிப்பு

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் ஒரு தமிழ் பிரதிநிதியே வெற்றிபெற முடியும் என்ற நிலைமை காணப்படுகின்றது, ஆகவே அந்த தேர்தல் மாவட்டங்கள் சம்பந்தமாக நாம் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய தேர்தல் அணுகுமுறை தொடர்பில் அந்த இரு மாவட்டக் கிளைகளுடன் பேச்சு நடத்தி முடிவொன்றை எட்டுவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், வடக்கு, கிழக்கிற்கு வெளியில் உள்ள மாவட்டங்களில் போட்டியிடுவது குறித்தும் பரிசீலிப்பதற்கும் தீர்மானித்துள்ளோம். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக நியமனக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. கட்சியின் யாப்புப்படி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

புதியவர்களை தேர்தலில் உள்வாங்குவது, இளைஞர்களை உள்வாங்குவது தொடர்பிலும்

நீண்ட நேரம் பேசினோம். அதனை சரியாக நாம் அணுகுவோம் என்ற நம்பிக்கை

இருக்கிறது. மக்களிடத்தில் இது தொடர்பான பாரிய எதிர்பார்ப்பு இருக்கிறது.

விசேடமாக தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றிக்கு பிற்பாடு அத்தகைய

எண்ணப்பாடுளங்களது பிரதேசங்களிலும் உயர்ந்துள்ளது. அது நல்ல விடயம்.

இளைஞர்கள், ஆளுமையுள்ளவர்கள், படித்தவர்கள், பெண்கள் என அவர்களுக்கான

பிரதிநித்துவத்தை உறுதி செய்யும் வகையில் தான் வேட்பாளர்கள் தெரிவு

செய்யப்படுவார்கள். அதற்கான நியமனக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழு இறுதி முடிவுகளை எடுக்கும். ஆனால் மாவட்ட ரீதியாக கலந்து

ஆலோசித்து தான் அந்த முடிவுகள் எடுக்கபடும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று தனியாகச் செயற்படும் சிலர்

கட்சிகள் எமது தலைவருடன் பேசியுள்ளார்கள். ஆனால், தம்முடன் இணையுமாறு அவர்கள் அழைப்பு எதனையும்

விடவில்லை. அதேநேரம் இன்றையமத்திய செயற்குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கியபோது சேர்ந்திருந்து பின்னர் பிரிந்து சென்றவர்களுக்கே அழைப்பு விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. வேறு யாராவது இணைவதற்குக் கோரிக்கை விடுத்தால் அது பற்றி நாங்கள் பரிசீலிக்கலாம். நாங்கள் பிரதானமான தமிழ் அரசுக் கட்சி. இது வரைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக வேறு கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்ட போது தேர்தலுக்கு

முகம் கொடுத்தது இலங்கை தமிழரசுக் கட்சியின் பெயரிலும், அதன்

சின்னத்திலுமே தான். அதே முறையில் நாங்கள் இந்த தேர்தலையும்

சந்திப்பதற்கு பிரதான கட்சி என்ற வகையில் அழைப்பு விடுகின்றோம் எனத் தெரிவித்தார்.

(100)

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வுக்குப் பின்னரான சலுகைகளைக் குறைப்பதற்கு நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருப்பதால், வழங்கப்படும் சலுகைகளைச் சீரமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மக்கள் விரும்பும்படி பொதுத் தேர்தலில் தமிழ் அரசுகட்சி ஆற்றல்மிக்க புது முகங்களையே களமிறக்கவேண்டும்

## சுமந்திரனின் விருப்பம் இது



நாட்டில் ஏற்பட்ட மாற்றம் தமது பிரதேசங்களிலும் ஏற்படவேண்டும் என விரும்பும் தமிழ் மக்களின் அபிலாஷைக்கு அமைய எதிர்வரும் பொதுத்தேர்தலில் 'நிரந்தர' அரசியல்வாதிகளை நீக்கி, ஆற்றல்மிக்க புதிய முகங்கள் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் களமிறக்கப்பட வேண்டும் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதுடன், எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதனையடுத்து, சகல அரசியல் கட்சிகளும் இம்முறைபொதுத்தேர்தலுக்குமுகங்கொடுப்பதற்கான வியூகங்களைஅமைத்துவருகின்றன. இந்நிலையில், இலங்கைத்தமிழ்அரசுக் கட்சி இப்பொதுத்தேர்தலை அணுகவிருக்கும்விதம்குறித்துகருத்துவெளியிட்டுள்ள சுமந்திரன் மேலும் கூறியிருப்பதாவது -

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி போட்டியிடும்போது,நாடளாவியரீதியில்நிகழ்ந்துவரும் மாற்றங்கள் எமது பிரதேசங்களிலும் நிகழுமா என்ற கேள்வி பலரால் முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக 'நிரந்தர' அரசியல்வாதிகளை நீக்கி, இளையவர்கள், பெண்கள், ஆற்றல் உடையவர்கள், அனுபவசாலிகள் எனப் பொருத்தமான தரப்பினரை அரசியல் கட்சிகள் முன்னிறுத்துமா என்ற அங்கலாய்ப்பு நம் மக்கள் மத்தியில் உள்ளது.

அதனைப் புரிந்துகொண்டு இம்முறை பொதுத்தேர்தலில் ஆற்றல்மிக்க புதிய முகங்களைக் களமிறக்கவேண்டும்என்பதேஎன்னுடையதனிப்பட்ட நிலைப்பாடாகும். எமது கட்சி உறுப்பினர்கள் பலரும் அத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். அதற்கமைய கட்சியின் மத்திய செயற்குழுவே இதுகுறித்துத் தீர்மானிக்கும். இருப்பினும் அந்தத் தீர்மானம் மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் வகையில் அமையவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைகூடம் இயங்க ஆரம்பம்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடம் வெள்ளிக்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக சத்திரசிகிச்சைக் கூடக் கட்டடம் மற்றும் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ஆகியன நிர்மாணிக்கப்பட்ட போதிலும் ஆளணிப் பற்றாக்குறை,வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வருடக் கணக்கில் சத்திர சிகிச்சைக் கூடத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் பூதாகரமாக வெடித்திருந்த நிலையில் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ் சத்திர சிகிச்சைப் பிரிவை இயக்க நடவடிக்கை எடுத்து அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் ரவிராஜ், மகப்பேற்று நிபுணர் சிறீசுபாஸ்கரன் உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் சத்திரசிகிச்சைக் கூடத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்துள்ளனர்.

ஆரம்ப தினத்தில் கோ்னியா நோயாளிக்கான சத்திரகிகிச்சை,இரு சிசேரியன் சத்திர சிகிச்சைகள், மேலும் நான்கு சிறிய சத்திர சிகிச்சைகள் ஆகியன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை அனுப்பும் நிலைமை வெகுவாகக் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(05)

# வடக்கின் புதிய ஆளுநருக்கு இந்திய துணை தூதர் வாழ்த்து





யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி வடமாகாணத்தின் ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, வடக்கில் இந்தியாவிற்கும் இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(05)

# ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய் மலசலகூட கழிவு நீர் தொட்டியிலிருந்து சடலமாக மீட்பு

அநுராதபுரம், பிஹிம்பியகொல்லேவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மலசலகூட கழிவு நீர் தொட்டியிலிருந்து ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பிஹிம்பியகொல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

குறித்த வீட்டின் மலசலகூட கழிவு நீர் தொட்டி யிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அயல்வீட்டார் சடலமாக மீட்கப்பட்டவரின் மகனிடம் தெரிவித்துள்ளனர்.

பின்னர், சடலமாக மீட்கப்பட்டவரின் தாயும் மகனும் வீட்டின் மலசலகூட கழிவு நீர் தொட்டியைச் சோதித்துப் பார்த்த போது சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து, சடலமாக மீட்கப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாயின் தாயும் மகனும் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் எவரேனும் நபரால் கொலை செய்யப்பட்டு மலசலகூட கழிவு நீர் தொட்டியில் வீசப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# குமாரவெல்கம காலமானார்



முன்னாள் அமைச்சர் குமார வெல்கம காலமானார்.

மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே குமாரவெல்கம (வயது 74) காலமானார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் ஒற்றுமை எனும் மாயை

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் பிரதிநித்துவத்தைத் தக்கவைக்கும் வகையில் மீண்டும் ஒற்றுமைக் கோசத்தை தமிழ் அரசுக் கட்சி கையில் எடுத்திருப்பது கண்டனத்துக்குரியது. தமது கட்சியின் தலைமையில் வீட்டுச் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு வருமாறு அந்தக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர்களான ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் ஆகியவற்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. தமிழர்களின் ஒற்றுமை என்று கூறிக்கொண்டு தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் அரசுத் தலைவர் வேட்பாளராக அரியநேத்திரனைக் களமிறக்கி எஞ்சியிருந்த தமிழரின் ஒற்றுமையையும் சிதைத்து, பிளவுபடுத்தி உலகத்திற்கு இந்தக் கட்சிகள் வெளிப்படுத்திய பின்னரும் தமிழ் அரசுக் கட்சி தேர்தலுக்காக மீண்டும் இந்தக் கட்சிகளுடன் ஒற்றுமைக் கோசத்தைத் தூக்கியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

அதுவும்போக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக, ஒற்றுமையாக இந்தக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் 24 ஆசனங்களைக் கொண்டிருந்தபோதுகூட கொழும்பு அரசுடன் பேசி தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வை இவற்றால் பெற முடிந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கு மட்டுமே இந்தக் கட்சிகள் ஒற்றுமைக் கோசத்தைத் தூக்கிப் பிடிக்கின்றனவே தவிர, அதன் பின்னர் நாடாளுமன்றச் செயற்பாடுகளிலோ அரசியல் தீர்வு விடயங்களிலோ கருத்தொருமித்துச் செயற்பட்டதில்லை. தமது கூட்டுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் துரோகிகள் என்று முத்திரை குத்தியும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக்கொண்டும் பின் கதவால் அரசுத் தலைவருடனும் ஆளும் தரப்புடனும் தமது தனிப்பட்ட நலன்களுக்காக உறவுகளைக் கொண்டிருந்ததுமே கண்ட மிச்சம். ஒட்டுமொத்தத்தில் ஒற்றுமை என்பது இவர்களுக்கு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான உத்தி மட்டுமே.

கொள்கை ரீதியில்கூட இவர்களுக்கு இடையில் ஒற்றுமை கிடையாது என்பதை இந்தக் கட்சிகள் தமது செயல் மூலம் கடந்த காலங்களில் நிரூபித்திருக்கின்றன. வடக்கு மாகாண சபையால் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்ட கரும்புச் செய்கை மற்றும் சீனித் தொழிற்சாலையை, அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோடு இரகசியமாகப் பேசி வவுனியாவிற்குக் கொண்டு வருவதற்கு இந்தக் கட்சிகளில் ஒன்று முயற்சித்தது. வடக்கு மாகாணம் வறண்ட பிரதேசம், இங்கு கரும்புபோன்ற அதிக தண்ணீரை வேண்டிநிற்கும் பயிர்ச்செய்கைகள் பொருத்தமற்றது என்ற காரணத்தாலேயே அந்தத் திட்டத்தை வடக்கு மாகாண சபை ஏற்க மறுத்திருந்தது. அது தெரிந்திருந்தும்கூட தமது சுயஇலாபத்துக்காகவும் சுய நலன்களுக்காகவும் அந்தத் திட்டத்தைச் செயற்படுத்த ஒரு கட்சி இரகசியமாக நடவடிக்கை எடுத்தது.

அதேபோன்று, அரகலய போராட்டத்தின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவராக நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்படுவதற்கு ஆதரவளித்தவர்களில் இந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருந்தார்கள் என்று அரசுத் தலைவரே குறிப்பிட்டிருக்கின்றார். பணம் வாங்கிக்கொண்டு இவர்கள் இவ்வாறு ஆதரவளித்தார்கள் என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. தமிழ் மக்களின் எதிர்காலம் மற்றும் இளையோரின் எதிர்காலம் குறித்து அக்கறைகொள்ளாமல் தமது சொந்த நலன்களுக்காக மதுபான சாலைகளுக்கான அனுமதியை அரசுத் தலைவரிடம் இருந்து பெற்று போதையால் தமிழர்களை நாசமாக்க முயற்சித்ததிலும் இந்தக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பங்குண்டு. இதுபோன்று தமிழ் மக்கள் குறித்து எந்தவொரு விடயத்திலும் ஒற்றுமையோடு செயற்படாத, தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்திலேயே ஒற்றுமையோடு செயற்படாத இந்தக் கட்சிகள் தேர்தல் என்று வந்தால் மட்டும் ஒற்றுமைக் கோசத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றுவது முற்றிலும் கண்டனத்துக்குரியது.

இந்தநிலையில்தமிழ்அரசுக்கட்சி இப்போது தேர்தலுக்காக மற்றைய கட்சிகளின் துரோகங்களையும் காட்டிக்கொடுப்புக்களையும் மறந்து, மறைத்து ஒற்றுமைக் கோசத்தைக் கையில் எடுத்திருப்பதும் தனது கட்சிக்குள்ளேயே இருக்கும் இத்தகையவர்களையும் ஒற்றுமை என்ற காட்டி தொடர்ந்தும் தக்கவைப்பதும் கீழ்த்தரமான அரசியல் அன்றி வேறொன்றும் இல்லை. அந்தக் கட்சி இந்த நிலைப்பாட்டிலிருந்து விலகி நாடாளுமன்றத் தேர்தலை தனித்து எதிர்கொள்வதும் ஏனைய கட்சிகளும் தனித்தனியே தேர்தல் எதிர்கொள்வதுமே சிறந்த தெரிவு. அப்போதுதான் ஒவ்வொரு கட்சியும் தனது கொள்கை கோட்பாடுகளை மக்களிடம் –முன்வைத்து அதற்கான ஆணையைப் பெறமுடியும். தேவை ஏற்படின் உண்மையில் தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக ஒற்றுமைப்படும் நோக்கம் இருப்பின் இந்தக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் அந்த ஒற்றுமையை செயற்படுத்திக் காட்டட்டும். அதைவிடுத்து ஒற்றுமை என்ற மாயையைக் காட்டி தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுவதை இந்தக் கட்சிகள் கைவிடவேண்டும்.

# தென்னாப்பிரிக்காவில் மீண்டும் மொழிக் கிளர்ச்சி!

ஷோலா லவால்

தென்னாப்பிரிக்காவில் இயற்றப்பட்டுள்ள புதிய கல்விச் சட்டம், மொழித் திணிப்பு காரணமாக மக்களால் கடுமையாக எதிர்க்கப்படுகிறது.இது ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையேயும் விரிசலை ஏற்படுத்திவிட்டது.

வெவ்வேறுமொழிகளைப்பேசும்இனங்களைக் கொண்ட தென்னாப்பிரிக்கா ஏற்கெனவே 'இனவொதுக்கல்' என்று அழைக்கப்படும் நிறவெறிக்கு எதிராகக் கடுமையாகப் போராடி விடுதலை பெற்ற நாடாகும். அனைத்துப் பிரிவு மக்களுக்கும்சமநியாயம்வழங்கும்வகையில்தான் புதிய சட்டம் இருக்கிறது என்று முக்கிய ஆளுங்கட்சி கூறினாலும் அதன் தோழமைக் கட்சி உள்பட மற்றைய தரப்புகள் அதனை ஏற்கவில்லை. அப்பட்டமான பொருளாதார சமத்துவம் இன்மை காரணமாகப் பெரும்பாலான கறுப்பின மக்களால், தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முடிவதில்லை. எனவே, அவர்களிடையே கல்வியறிவு மிகவும் குறைவாகவே இருக்கிறது.

கறுப்பின வளரிள மாணவர்களில் 34.7% பேர்தான் 2022இல் உயர்நிலை பள்ளிப்படிப்பை முடித்தனர், இது 1996இல் இருந்த 9.4% என்ற அளவுடன் ஒப்பிட்டால் அதிகம்தான். இருந்தாலும் கறுப்பினத்தவர்களில் 9.3% பேர்தான் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகிய மூன்று கட்டங்களையும் தாண்டியவர்கள். வெள்ளை இனத்தவர்களிலோ அது 39.8%.

### ரமபோசா நம்பிக்கை

'நாம் கொண்டுவந்திருக்கும் புதிய கல்விச் சட்டம், படிப்பதற்கு அதிகப்படியான கதவுகளைத் திறந்துவைக்கிறது. மிகச் சிறுவயது முதலே கல்வி பயில இது வலுவான அடித்தளம் இடுகிறது. முறையான பள்ளிக்கல்வி பெற இது உதவும்' என்று புதிய கல்விச் சட்டம் குறித்து தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ரமபோசா அறிவித்தார்.

புதிய சட்டத்தை எதிர்ப்பவர்கள் அதிலும் குறிப்பாக 'ஆப்ரிக்கான்ஸ்' என்ற மொழி பேசுவோர், பள்ளிக்கூட நிர்வாகத்தில் அரசின் கண்காணிப்பை அதிகப்படுத்தவும், தாய்மொழிக் கல்வி பெற முடியாமல் மாணவர்களைத் தடுக்கவும்தான் புதிய சட்டம் அதிகம் துணைபுரியும் என்று அச்சப்படுகின்றனர்.

மக்கள் எதிர்க்கும் (பெலா - யசிஸிபு) 'அடிப்படைக் கல்வித் திருத்தச் சட்டம்' என்ன அம்சங்களைக் கொண்டிருக்கிறது, மக்களில் சில குழுவினர் ஏன் அதனை எதிர்க்கின்றனர் என்று பார்ப்போம்:

புதியசட்டம், தென்னாப்பிரிக்காவில் ஏற்கெனவே அமலில் உள்ள 'தென்னாப்பிரிக்க பள்ளிகள் சட்டம் 1996', 'கல்வியாளர்கள் வேலைவாய்ப்பு சட்டம் - 1998' ஆகிய இரண்டையுமே திருத்துகிறது.

'மாணவர்களுக்குப் பிரம்படி - கசையடி போன்ற உடலைத் துன்புறுத்தும் தண்டனைகளை ஆசிரியர்கள் அளிக்கக்கூடாது, படிக்கும் வயதில் உள்ள குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாத பெற்றோருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும், பள்ளிக்கூடங்களில் மாணவர்களுடைய கல்வித்திறனை மதிப்பிடும் 'கிரேடு' வழங்குவது கட்டாயம், வீடுகளிலிருந்தபடியே சுயமாக படிக்கும் குழந்தைகளைப் பள்ளிக்கல்வித் துறை அடிக்கடி ஆய்வுசெய்ய வேண்டும்' என்பதே புதிய சட்டம்.

### பிரிவுகள் 4 - 5

பள்ளிகளில் பயிற்றுமொழியாகப் பின்பற்ற வேண்டிய மொழிகள், மாணவர்களைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கான விதிமுறைகள் ஆகியவற்றை வலியுறுத்தும் பிரிவுகள் 4, 5 ஆகியவைதான் பலமாக எதிர்க்கப்படுகின்றன. 'ஆப்ரிக்கான்' என்ற மொழி பேசும் சிறுபான்மை மக்கள் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர்.

தென்னாப்பிரிக்க அரசு அங்கீகரித்துள்ள 11 அதிகாரப்பூர்வ மொழிகளில் ஏதேனும் ஒன்றைப் பயிற்றுமொழியாக பள்ளிக்கூடங்கள் தேர்வுசெய்துகொள்ளலாம் என்று கூறும் சட்டம், மாணவர்களைச் சேர்ப்பதற்கான கொள்கையாக சிலவற்றைக் குறிப்பிடுகிறது. பள்ளிக்கூட அளவில் மாணவர்களைச் சேர்த்துக்கொண்டாலும், அது தொடர்பான 'இறுதி அதிகாரம்' தேசிய அடிப்படைக் கல்வித் துறைக்குத்தான் என்கிறது ஒரு உட்பிரிவு.

இதுநாள்வரையில் பள்ளிக்கூடத்தில் எந்த மொழியில் பாடம் நடத்துவது, என்னென்ன மொழிகளைக் கற்றுத்தருவது என்பதெல்லாம் அந்தந்தப்பள்ளிக்கூட 'மேலாண்மைக்குழுக்'களால் மட்டுமே முடிவுசெய்யப்பட்டு வந்தன. இப்போது அதை 'கல்வி அமைச்சகம்' தன் பொறுப்பில் மறைமுகமாக எடுத்துக்கொண்டிருக்கிறது. 'ஆப்ரிக்கான்' என்ற மொழியில் சரளமாகப் பேசவும் எழுதவும் தெரியாத கறுப்பினக் குழந்தைகளைப் பள்ளிக்கூட நிர்வாகங்கள் சேர்க்க மறுப்பதால், கல்விக் கொள்கையில் புதிய மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அரசு அதிகாரிகள் கூறுகின்றனர்.

தென்னாப்பிரிக்காவின் விடுதலைக்குப் பிறகு இனவொதுக்கல் கொள்கை மறைந்தது; நல்ல நிதிநிலையுள்ள பள்ளிக்கூடங்களுக்குக் கறுப்பினப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளையும் அனுப்பத் தொடங்கினர். முன்னர் அந்தப் பள்ளிக்கூடங்களில் வெள்ளை இனக் குழந்தைகள் மட்டுமே சேர முடியும், அங்கே 'ஆப்ரிக்கான்' என்பது முக்கியமான பாட மொழியாக இருந்தது.

'ஆப்ரிக்கான்' மொழி தெரியாததால் தன்னுடைய குழந்தைக்குப் பள்ளியில் அனுமதி கிடைக்கவில்லை என்று கறுப்பினப் பெற்றோர்களே புகார்செய்தனர். நிற அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவதாக இப்போதும் புகார்கள் வருகின்றன.

பிரிட்டோரியாவில் உள்ள லாயர்ஸ்கூல் டேனி மலானில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க மறுக்கிறார்கள் என்று ஆப்ரிக்கான்ஸ், செட்ஸ்வானா மொழி பேசும் கறுப்பினப் பெற்றோர் பலர் அதன் எதிரிலேயே போராட்டம் நடத்தினார்கள். பள்ளிக்கூட நிர்வாகம் புகாரை மறுத்தது. அதே பள்ளியில் தங்கள் குழந்தைகள் படிப்பதாக வேறு பல கறுப்பினப் பெற்றோர்கள் தொலைக்காட்சி நிருபரிடம் உறுதிப்படுத்தினர். மொழி அடிப்படையில்தான் சில மாணவர்கள் நிராகரிக்கப்பட்டனர் என்பதும் பிறகு தெரிந்தது.

### மொழிக்கு ஆபத்து!

புதிய கல்விச் சட்டத்தால் தங்களுடைய மொழி அழிந்துவிடும் என்று கறுப்பினத்தவர்களில் சில பிரிவினர் அச்சம் தெரிவிக்கின்றனர். ஆங்கில வழியில் கற்குமாறு அதிகாரிகள் எங்களுக்கு நெருக்குதல் அளிக்கின்றனர், அனைவரும் ஆங்கிலவழிப் பள்ளிக்கூடங்களுக்கு மாறிவிட்டால் மிகச் சிறிய எண்ணிக்கையில் உள்ள ஆப்பிரிக்க குழுக்கள் பேசும் மொழிகள், பண்பாடு, தனி அடையாளம் ஆகிய அனைத்தும் நாளடைவில் இறந்துவிடும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

'ஆப்ரிக்கான்' என்பது - டச்சு (ஹாலந்து - ஒல்லாந்து) மொழியுடன் சிறிதளவு ஜெர்மனி, ஆப்பிரிக்காவிலேயே பேசப்படும் கொய்சான் மொழிகள் ஆகியவை கலந்த - கலப்புமொழியாகும் (இந்தி, உருதுபோல). 18வது நூற்றாண்டில் இந்தக் கலவை மொழி, அப்பகுதிவாழ் மக்களால் அதிகம் பேசப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் 13% மக்கள் இதைப் பேசுகின்றனர். அப்படிப் பேசுகிறவர்களில் 50% கலப்பு நிறத்தவர், டச்சுக்காரர்களின் வெள்ளை நிற வாரிசுகள் 40%. கறுப்பின மக்களில் 9%, தென்னாப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்களில் 1% இம்மொழி பேசுகின்றனர். வர்த்தகஸ்தலங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் 'ஆப்ரிக்கான்' அதிகம் பேசப்படுகிறது. கேப் மாநிலத்தின் வடக்கு, மேற்கு பகுதிகளிலும் இதைப் பேசுவோர் அதிகம்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள 23,719 பொதுப் பள்ளிகளில் 2,484இல் ஆப்ரிக்கான் மொழியை மட்டுமேயோ, அல்லது அதை இரண்டாம் மொழியாகவோ ஆபிரிக்கானைக் கற்றுத்தருகின்றன. மற்றப் பள்ளிக்கூடங்களில் பெரும்பாலும் ஆங்கிலம்தான் பாட மொழி, பயிற்றுமொழி. பள்ளிக்கூட மொழியைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை அதிகாரிகளுக்குக் கொடுத்தால் அது அரசியல் நுழையவே வழிவகுக்கும், நாளடைவில் ஆப்ரிக்கான் மொழியைக் கற்றுத்தரும் பள்ளிக்கூடங்களின்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# தென்னாப்பிரிக்காவில் மீண்டும் மொழிக் கிளர்ச்சி!

4ம் பக்க தொடர்ச்சி..........

எண்ணிக்கையே குறைந்துவிடும் என்று பலரும் அஞ்சுகின்றனர். மாணவர்கள் சேர்க்கையிலும் அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் தரப்படுவதுகூடாது என்று வலியுறுத்துகின்றனர்.

### கூட்டணியில் பிளவு

'இது தேசிய ஒற்றுமைக்கான அரசு அல்ல, தேசிய பிளவுக்கான அரசு' என்று 'டெய்லி மாவரிக்' என்ற தென்னாப்பிரிக்க நாளிதழின் இணையதளத்தில் ஒரு வாசகர் பதிவிட்டுள்ளார். காரணம், தென்னாப்பிரிக்காவை ஆளும் தேசிய ஐக்கிய அரசு (றூலிஸமி. லிகூி ஹிழிமிஷ்லிஜ-ழியி ஷீஜஷ்மிதீ - றூஹிஷீ) கூட்டணியில் தோழமைக் கட்சிகளே அரசின் சட்டத்தை எதிர்க்கின்றன. அதிபர் ரமபோசாவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏஎன்சி) கூட்டணியில் பெரிய கட்சி; வேளாண் அமைச்சர் ஜான் ஸ்டீன்ஹியூசன் தலைமையிலான ஜனநாயக கூட்டணி (டிஏ) இரண்டாவது பெரிய கட்சியாகும்.

இவ்விரு தோழமைக் கட்சிகளிடையிலேயே இந்தச் சட்டம் தொடர்பாக கருத்து வேறுபாடு இருக்கும்போது இதை அமல்படுத்தத் துடிப்பது சரியல்ல என்று ஜான் ஸ்டீன்ஹியூசன் கண்டித்துள்ளார். 'இந்தச் சட்டம் இறுதியாக அமலுக்கு வந்தால் உரிய பதிலடி கொடுக்கப்படும்' என்று எச்சரித்துள்ள ஜான் ஸ்டீன்ஹியூசனே, 'ஆப்ரிக்கான்' பேசும் கறுப்பர். இதே கட்சியைச் சேர்ந்த கல்வி அமைச்சர் சிவிவி கருபே, பிரிட்டோரியாவில் இந்தச் சட்டம் கையெழுத்தான நிகழ்ச்சியில் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் - பங்கேற்கவில்லை.

### உணர்ச்சிகரமனது மொழி

மொழிப் போராட்டம் என்பது தென்னாப்பிரிக்காவிலும் உணர்ச்சிகரமாகவே நினைவுகூரப்படுகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே இது தொடங்கியது. தங்களுக்கான அரசு நிர்வாகம், மொழி ஆகியவற்றைத் தீர்மானிக்கும் உரிமை தங்களுக்குத்தான் உண்டு என்பது தென்னாப்பிரிக்கர்களின் நீண்ட கால நிலைப்பாடு. நிற அடிப்படையிலும் இன அடிப்படையிலும் வெள்ளைக்காரர்கள் தங்களைத் தனிமைப்படுத்தியதையும் சிறுமைப்படுத்தியதையும் தென்னாப்பிரிக்கர்கள் மறந்துவிடவில்லை.

ஆப்ரிக்கான் என்ன மொழி: ஆப்ரிக்கான் என்ற மொழியின் முதுகெலும்பு டச்சு மொழிதான்; உரிய இலக்கணம் இல்லாமல் பேச்சு வழக்காக அது பரவிவிட்டது. அதைச் சமையலறை மொழி என்றே அந்த நாளில் கூறுவார்கள். காரணம் டச்சுக்காரர்களின் வீடுகளில் வேலை செய்த கறுப்பர்களுடன் அவர்கள் பேசியதே நாளடைவில் அந்த மொழியாகிவிட்டது.

தென்னாப்பிரிக்காவில் குடியேறிவிட்ட டச்சுக்காரர்கள் 'போயர்கள்' என்று அழைக்கப்பட்டனர். 1800களின் இறுதிப் பகுதியில், அவர்களையும் காலனிவாசிகளாக சிறைப்பிடித்த பிரிட்டிஷாருக்கு எதிராக இரண்டு போர்களை நடத்தினர். பிறகு சுதந்திரம் பெற்றனர். வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற 'போயர்கள்', 'ஆப்ரிக்கான்' (பேச்சு வழக்கு) மொழியையே சுதந்திர மொழியாகக் கருதினர். எனவே, அது 1925இல் அரசின் மொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட்டது.

நிறவெறி உச்சத்திலிருந்த காலத்தில், ஆப்ரிக்கான் மொழியைப் பேசுகிறவர்களைக்கூட தென்னாப்பிரிக்க பூர்வகுடிகள் ஆதிக்கர்களான டச்சுக்காரர்களுடன் சேர்த்து அடையாளம் கண்டனர். எனவே, உள்ளூர அந்த மொழி மீது வெறுப்பும் உண்டு. ஆப்ரிக்கான், ஆங்கிலம் என்ற இரண்டு மொழிகளைக் கட்டாயப்படுத்திய நிறவெறி அரசு, அவற்றைப் பேச முடியாத பூர்வகுடிகளைத் தொலைதூரங்களில் குடியமர்த்தியது. அவர்கள் வசித்த இடங்களை 'பண்டுஸ்தான்' என்றும் அழைத்தது.

### சொவேட்டோ எழுச்சி, பலி 700!

அன்றைக்கு இருந்த பள்ளிக்கூடங்களில் பெரும்பாலானவை ஆங்கிலத்தில்தான் அனைத்துப் பாடங்களையும் நடத்தின. கறுப்பின மக்களின் மேன்மைக்கு ஆங்கிலம்தான் உதவும் என்று கூறப்பட்டது.

ஆனால் 1961 முதல் ஆங்கிலம், ஆப்ரிக்கான் ஆகிய இரண்டு மொழிகளும் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக்கப்பட்டன. கறுப்பின மக்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் சொவேட்டோ நகரில் இதை முதலில் அமல்படுத்த நிறவெறி அரசு முடிவுசெய்திருந்தது. இதை எதிர்த்து கறுப்பின மாணவர்கள் 1976 ஜூனில் பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

பள்ளிக்கூட மாணவர்கள் என்றும் பாராமல் அந்நாளைய நிறவெறி அரசு கடுமையான ஒடுக்குமுறையைக் கையாண்டது. அந்தக் கிளர்ச்சியில் உயிரிழந்த மாணவர்களின் எண்ணிக்கை 176 முதல் 700 வரை என்று வெவ்வேறு தரப்புகள் தெரிவிக்கின்றன. உலக வரலாற்றில் மொழிப் போரில் அதிகம் பேர் உயிரிழந்த துயரம் அங்குதான் அரங்கேறியது. 'சொவேட்டோ எழுச்சி' என்றே பின்னாளில் அது வரலாற்றில் பதிவானது.

மாணவர்களுடைய கிளர்ச்சியை அடுத்து அரசு தனது இரட்டை மொழித் திணிப்புக் கொள்கையை 1976 ஜூலையில் கைவிட்டது. கறுப்பர்களுடைய பள்ளிகளில் பயிற்று மொழியை அவர்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், 90% பள்ளிக்கூடங்கள் ஆங்கிலத்தையே பயிற்றுமொழியாக ஏற்றன. நிறவெறி அரசு பரிந்துரைத்த இதர ஆப்பிரிக்க மொழிகளான ஜோசா என்கிற ஜூலு போன்றவற்றை கறுப்பர்கள் நிராகரித்தனர்.

கறுப்பின மக்களிடையே வேற்றுமையை விதைக்க, பழங்குடிமொழிகளை அரசு தந்திரமாக கையாள்கிறது என்று குற்றஞ்சாட்டினர். சேப்பாடி, செசோத்தோ, செட்ஸ்வானா, சீஸ்வதி, ஷிவேண்டா, இட்சோங்கா, டெபேலி ஆகிய ஆப்பிரிக்க மொழிகளையும் அதிகாரப்பூர்வ மொழிகள் பட்டியலில் அரசு அப்போது சேர்த்தது.

### அடுத்து என்ன?

அரசின் வெவ்வேறு உறுப்புகள், புதிய கல்விச் சட்டத்தின் சர்ச்சைக்குரிய 4, 5ஆவது பிரிவுகளை விவாதிக்கும். மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒருமித்த கருத்து ஏற்படாவிட்டாலும் சட்டம் அமலுக்கு வந்துவிடும் என்கிறார் அதிபர் சிரில் ரமபோசா. இந்தச் சட்டத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்படும் என்று ஆஃப்ரிஃபோரம் போன்ற மனித உரிமைக் குழுக்கள் அறிவித்துள்ளன.

அரசின் நடவடிக்கையால் ஆப்ரிக்கான் மொழி பல்கலைக்கழகத்தில் வழக்கொழியும் அளவுக்குத் தேய்ந்துவிட்டது என்று ஆஃப்ரிஃபோரம் அமைப்பின் ஆலனா பெய்லி குற்றஞ்சாட்டுகிறார். ஆஃப்ரிக்கான் மொழியில் கற்றுத்தரும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்துவிட்டது. இதற்கு எதிராக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நீதிமன்றங்களில் வழக்கு தொடுப்போம் என்கிறார் ஆலனா பெய்லி.

© அல் ஜஸீரா



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆளுநர் கோணேஸ்வரத்தில் வழிபாடு









கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரதிருகோணமலையில்உள்ளதிருக்கோணேஸ்வரம் ஆலய வழிபாட்டில் வியாழக்கிழமை ஈடுபட்டார். (05)

# அம்பேபுஸ்ஸவில் பஸ் மோதி வயோதிபப் பெண் உயிரிழப்பு

கொழும்பு - கண்டி வீதியில்உள்ளஅம்பேபுஸ்ஸ பிரதேசத்தில் வியாழன் மாலைபஸ்மோதிவயோதிபப் பெண்உயிரிழந்துள்ளார்என வரக்காப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து கொழும்புநோக்கிப்பயணித்த பஸ்ஒன்றுவீதியில்பயணித்த வயோதிபப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது காயமடைந்தவயோதிபப்பெண்வரக்காப்பொல வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டபின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேபுஸ்ஸ, வரக்காப்பொலபிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிகவிசாரணைகளைவரக்காப்பொல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# ஊழலற்ற மக்கள் சேவையை முன்னெடுக்க ஜனாதிபதி கிடைத்தமை இறைவன் செயல்

## வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு

ஊழலற்ற மக்கள் சேவையை முன்னெடுப்பதற்குபுதியஜனாதிபதிகிடைத்தமை இறைவனின்செயல்எனவடமாகாணஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வட மாகாண ஆளுநராக வெள்ளிக்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட நாகலிங்கம் வேதநாயகன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியால் நாம் எவருக்கும் பயப்படாமல் மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். இவர்ஜனாதிபதியாகவந்ததால்மாத்திரமேநான் இந்த பதவியை பெற்றுக்கொண்டிருக்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

வேறு எந்த ஜனாதிபதி வந்திருந்தாலும் இந்த பதவி எனக்கு கிடைத்திருக்கவும் மாட்டாது வேறொருவர் எனக்குப் பதவியை தந்திருந்தாலும் நான் இதனை ஏற்றுக் கொண்டிருக்கவும் மாட்டேன் எனத் தெரிவித்தார்.(05)



வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசுக் கட்சியை தனித்து போட்டியிட கோருவோர் கட்சியைச் சிதைப்பவர்களாம்

## முன்னாள் எம்.பி. சிறிநேசனின் கண்டுபிடிப்பு இது



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பாக போட்டியிடுவதை நாங்கள் விரும்புகின்றேம். இதுவே மக்களின் விருப்பமுமாகும். தனிப்பட்ட முறையில் போட்டியிட வேண்டும் என்று சொல்கின்றவர்கள் கட்சியை வளர்ப்பதற்குரிய நோக்கமுடையவர்களாக இருக்காது கட்சியை சிதைப்பதற்குரிய நோக்கமுடையவர்களாகத்தான் இருப்பார்கள் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

தமிழர்கள் ஒற்றுமையாக தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியில் ஒரு கட்சியாக தேர்தலில் முகம் கொடுக்க வேண்டும் எனும் கருத்தை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா சொல்லியிருக்கின்றார்.

உள்ளூராட்சி தேர்தலில் மாத்திரம் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் கட்சிகள் தனித் தனியாக போட்டியிட்ட பின்னர் இணைகின்ற பட்சத்தில் அதிகமான சபை ஆசனங்களை பெற முடியும் என்றும் அதன் மூலமாக சிறிலங்காதேசியகட்சிகளைஇணைத்துக் கொள்ளாமல், தமிழ் தேசிய கட்சிகளை மாத்திரம் இணைத்துக் கொண்டு இந்த சபைகளை கைப்பற்றி பலமாக கொண்டு செல்லலாம் என செல்லப்பட்டது.

உள்ளூராட்சிதேர்தலுக்குமட்டும்தான் இந்த நடைமுறை சொல்லப்பட்டது. ஏனைய மாகாண சபை தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து போட்டியிடுவதுதான் தமிழ்த் தேசிய கட்சிகளின் விருப்பம்.

தற்போது இடதுசாரி கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது தொழிலாளர் நலன் தொடர்பாகவும் ஏழை மக்களின் நலன் பற்றி சிந்திக்கின்ற கட்சி ஆட்சிக்கு வந்திருக்கின்றது. இந்த கட்சியாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இதைவிட கடந்த காலங்களில் காணி அபகரிப்புக்கள், ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, கப்பம் அதே போன்று ஈஸ்டர் குண்டு தாக்குதல் இந்த விடயங்கள் எல்லாம் மக்கள் எதிர்பார்க்கும் நீதி நியாயம் உண்மை போன்றவை மக்களுக்கு கிடைக்க வேண்டும். - எனத் தெரிவித்தார்.(05)



# கொரிய அரசு ஆதரவு

தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படை தன்மையுடன் கூடிய செயற்றிட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க கொரிய அரசாங் கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கொரியசர்வதேசஒத்துழைப்பு முகவர்நிறுவனத்தின்உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தனர்.

இலங்கைஅரசாங்கம்முன்னெடுக்கும் ஊழல், மோசடி ஒழிப்பு செயற்றிட்டத்துக்கு நிதி உதவி வழங்கவும், இலங்கையின் தேவை அடிப்படையில் கடன்களை வழங்கவும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இதன்போது இணக்கம் தெரிவித்தது.

இலங்கைக்கான கொரிய தூதுவர் மியோன்லீ, பிரதிதூதுவர் சோன்கய் ஜியோங், கொக்கியா இன் பணிப்பாளர் யுன்க்ஜின் கிம், பிரதி பணிப்பாளர்களான யோன்க்வன் கிம், யுன்சூ ஜியோன், டெமோவின் நிறைவேற்று அதிகாரி ரொஷான் சமரசிங்க மற்றும் இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பிரதி நிறைவேற்று அதிகாரி பீ.எம். யூ.எஸ். பன்னஹெக்க உள்ளிட்டோரும் இதன்போது கலந்து கொண்டனர். (05)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 'உலக சுற்றுலா தினம்' சிறப்புற்றது











கட்டுநாயக்க விமான நிலையத்தில் உலக சுற்றுலா தினத்தை வெள்ளிக்கிழமை பிரமாண்டமான முறையில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கொண்டாடியுள்ளது.

அந்தவகையில், இந்த ஆண்டுக்கான உலக சுற்றுலா தினத்தின் கருப்பொருள் 'அமைதிக்கான சுற்றுலா' என்பதாகும்.

உலக சுற்றுலா தினக் கொண்டாட்டத்தில், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் பணிப்பாளர் மதுபானி பெரேரா, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் பிரதி பணிப்பாளர் ஹரீந்திர விஜேவர்தன மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியக முகாமையாளர் வசனா குமாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதனையடுத்து , கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஊழியர்கள் அன்புடன் வரவேற்று அவர்களுக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கி வைத்தனர்.(05)

### வவுனியாவில் கோரவிபத்து!

# மின் கம்பத்தில் மோதி இளைஞர் ஒருவர் சாவு

வவுனியா குருக்கள் புதுக்குளத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குருக்கள் புதுக்குளத்தில் இருந்து தம்பனைக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற 30 வயது நபரே மின்கம்பத்தில் மோதுண்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

மின்கம்பி அறுந்த நிலையில் அவ்விடம் காணப்படுவதால், அந்த மின்கம்பி ஏற்கெனவே அறுந்து விழுந்திருந்ததா அல்லது விபத்து ஏற்பட்டபோது அறுந்து விழுந்ததா என்பதை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(05-100)

# நீதிமன்றிலிருந்து பூச்சிகொல்லி மருந்தை திருடிய பொலிஸாருக்கு விளக்கமறியல்

கற்பிட்டி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் உள்ள வழக்கு பொருள்களை வைக்கும் அறையிலிருந்து பூச்சிகொல்லி மருந்துகளைத் திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கற்பிட்டி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த போது வழக்கு பொருள்களை வைக்கும் அறையிலிருந்து பூச்சிகொல்லி மருந்துகளைத் திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு வெள்ளிக்கிழமை புத்தளம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(05)

# மட்டு. சுவிஸ் கிராமத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் அநியாயக் கொலை

## ஒருவர் கைது

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சுவிஸ் கிராமத்தில் அமைந்துள்ள வீடொன்றில் நண்பர்கள் சேர்ந்து மதுபானம்அருந்தியபோதுஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறிய நிலையில், இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அதனையடுத்து, தாக்குதலில் ஈடுபட்ட 30வயதுநபர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

சுவிஸ் கிராமத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞரே உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் இடம்பெற்ற வீட்டில் வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் நண்பர்கள் 5 பேர் ஒன்றுகூடி மதுபானம் அருந்தியுள்ளனர். பின்னர், அவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு சண்டையாக மாறியுள்ளது.

அவ்வேளைஐவரில்ஒருவர்கூரிய ஆயதத்தால் கழுத்துப் பகுதியில் தாக்கப்பட்டு, படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அந்த இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தாக்குதலில் ஈடுபட்டவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞரின் உடல் பிரேத பரிசோதனைக்காக நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கும் கொக்குவில் பொலிஸார் மேலதிகவிசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(05)

## முன்னாள் ....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க, தனது தேர்தல் பரப்புரையின்போது, முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியம் உள்ளிட்ட பயன்கள், சலுகைகளை முற்றாக நிறுத்துவார் என்று உறுதியளித்திருந்தார்.

இருப்பினும், அவர்களுக்கான நன்மைகள் 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் எண் ஜனாதிபதி உரிமைச் சட்டத்தின் விதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. அதனால் உடனடியாக அந்தச் சலுகைகளை நிறுத்த முடியாது.

சட்டத்தின்படி, ஒவ்வொரு முன்னாள் ஜனாதிபதியும் அவரது வாழ்நாளில், வாடகையின்றி பொருத்தமான குடியிருப்பைப் பயன்படுத்த உரிமை உண்டு. பொருத்தமான குடியிருப்பு வழங்கப்படாவிட்டால், மாதாந்திர ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு இணையான மாதாந்திர கொடுப்பனவு அவரது இருப்பிடத் தேவைக்காக வழங்கப் படவேண்டும்.

ஒவ்வொரு முன்னாள் ஜனாதிபதிக்கும், ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் பதவியை வகிக்கும் நபருக்கும் மாதாந்த சம்பளத்திற்குஇணையானமாதாந்தசெயலாளர் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். முன்னாள் ஜனாதிபதியின் விதவைகளுக்கு, அமைச்சரவை அமைச்சரின் பிரத்தியேக செயலாளராக பதவி வகிக்கும் நபருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளத்திற்கு இணையான மாதாந்த செயலாளர் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்கும் தகுதியுடையவர்கள் மற்றும் இந்த நேரத்தில் ஓர் அமைச்சரவை அமைச்சருக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளும் உள்ளன. கூடுதலாக, ஒருங்கிணைந்தநிதியில்இருந்துஓய்வூதியமும் வழங்கப்படுகிறது.

இந்தச் சலுகைகள் அனைத்தையும் ஆளும்தரப்பு மீளாய்வு செய்து தேர்தல் வாக்குறுதிக்கு அமைவாக அவற்றைக் குறைப்பதற்கான அளவுகோலை வகுக்கும் என ஜனாதிபதிக்கு நெருக்கமான உயர்மட்ட வட்டாரம் தெரிவித்துள்ளது.

'கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்ப்போம். சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பலன்கள் சட்டத் திருத்தங்கள் மூலம் மட்டுமே குறைக்கப்படும்' என்று அந்த வட்டாரம் தெரிவித்தது.

எதிர்வரும்திங்கட்கிழமைநடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் விவாதிக்கப்பட உள்ளது.

## முன்னாள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய முன்னணி, இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும்தனித்துவமாகப்போட்டியிட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. கடந்த காலங்களில் கறைபடியாத அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்ட, செயற்றிறன் மிக்க அரசியல்வாதிகள் பலரும் ஜனநாயக ஐக்கிய முன்னணியில் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

சில அரசியல்வாதிகளும் தமது கட்சியில் இணைந்து கொள்வதற்கான பேச்சுக்களில்ஈடுபட்டபோதும், பொதுமக்களின் அதிருப்திக்குள்ளான நாட்டின் நலனைப் பாதிக்கும் வகையில் கடந்த கால செயற்பாடுகளை கொண்ட எந்தவொரு அரசியல்வாதிக்கும் தமது கட்சியில் இடமளிக்கப்பட மாட்டாதென ஜனநாயக ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் இஸட்.ஏ.ஹிதாயத்துல்லா ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மக்கள் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், மீண்டும் மக்களுக்குநிவாரணம்வழங்கும்திட்டங்களை நிறுத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கக்கூடாது.

குறிப்பாகக் கடந்த ஆளும்தரப்பினால் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு திறைசேரியின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டது. தேர்தல்கள் காலப்பகுதியில் குறித்த பணிகளை முன்னெடுக்க வேண்டாமென நிதியமைச்சுக்கும் கடற்றொழில் அமைச்சுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால்கடிதம்அனுப்பப்பட்டது.

அந்த பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ள நிலையில் அவை நிறுத்தப் படக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலின் போது குறித்த நிவாரணங்கள் நிறுத்தப்பட் டமையினால் கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட பலரும் பாதிப்படைந்தனர். அவை தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

## 7 தமிழ்க் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கவுள்ள நிலைலேயே இந்த சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## சாதாரண ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ams.gov.lk ஆகிய இணையத்தளங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தப் பரீட்சைக்கு 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 விண்ணப்பதாரர்கள் தோற்றியிருந்ததுடன், நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 527 நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது. இவர்களில் 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை விண்ணப்பதாரர்களும், 65 ஆயிரத்து 331 தனியார் விண்ணப் பதாரர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

## இனக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருந்தோம். அதன் பிரகாரம் அம்மக்களின் அபிலாசைகளை முன்னெடுத்து செல்லும் பொருட்டு சில வெளிப்படுத்தல்களை அரசியல் தலைமைகளுக்கு வழங்குவதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் பொறுப்புடன் செயற்பட தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் சில பரிந்துரைகளை முன்வைக்க எண்ணுகின்றது. அவையாவன, இனங்களுக்கு இடையில் குரோதங்களையோ முரண்பாடுகளையோ ஏற்படுத்தாத வகையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு உண்மைகளை வெளிப்படுத்தி யதார்த்த பூர்வமான வாக்குறுதிகளை வழங்கி இந்தத் தேர்தலில் அரசியல் தலைமைகள் தங்களுக்கான தேர்தல் தளத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இதேவேளை தமிழர் தரப்பில் பல்வேறு நியாயப்பாடான தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. காலாகாலமாக அவர்கள் தங்களுடைய அரசியல், சமூக, சமய, கலாசார விடயங்களில் தங்களுக்கான ஒரு உறுதிப்பாடானதும் நிலையானதுமான தீர்வினை வேண்டி நிற்கின்றனர்.

அந்த வகையில் கடந்த காலங்களைப் போல் அல்லாமல் ஒரு தீர்க்கமானதும் அர்த்தபுஷ்டியானதும் தற்கால அரசியல் தளத்துக்குஏற்றாற்போல்நகர்ந்துசெல்லக்கூடிய அரசியல் தலைமைகள் உருவாக வேண்டும் என்பதோடு சட்டவாக்க சபைக்கு செல்பவர்கள் குற்றச்செயலோடு சம்பந்தமற்றவர்களாகவும் சுயநலம் அற்றதும் ஊழல் மற்றும் அரசியலால் தனிநபர் முன்னேற்றம் போன்றவற்றைக் தவிர்த்து சமூகம் சார் அறிவுடன் அவை சார்ந்த சிந்தனையை மேலோங்கி கொண்டு செல்லக்கூடிய முற்போக்காளர்களை இந்த அரசியல் களத்தில் களமிறக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை தமிழ் மக்கள் முன்வைத்திருக்கின்றார்கள்.

ஆகவே, தமிழர்கள் தங்கள் பிரதிநிதித் துவத்தின் வலிமையை நிலை நாட்டுவதற்காக தமிழர் தரப்பில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகள் ஓர் அணியில் நின்று அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என கோருவதுடன் இளம் சமூகத்தினரையும் புதியவர்களையும் களம் இறக்கி ஆரோக்கியம் உள்ள ஒரு அரசியல் தளத்தை உருவாக்க வேண்டும் என்பதோடு தமிழ் மக்களின் உணர்வுசார் விடயங்களை சகோதர சிங்கள மொழி பேசும் மக்களிடம் கொண்டு செல்லும் ஆற்றல் உள்ளவர்களையும் தெரிவு செய்ய ஆவன மேற்கொள்ளுமாறும் உண்மை மற்றும் நல்லிணக்க மன்றமானது அரசியல் தலைமைகளிடம் முன்வைக்கின்றது.

தமிழர் தரப்பு அரசியல் கட்சிகள் அனைத்தும் விட்டுக்கொடுப்புகளோடும் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் சிந்தித்து ஓரணியில் செயற்படுவதற்கு ஏற்றாற்போல் ஆரோக் கியமான கலந்துரையாடல்களை நடத்தி இந்த பாராளுமன்றத் தேர்தல் களத்தை சந்திக்க வேண்டும் என உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அரசியல் தலைமைகளிடமும் கோரி நிற்கிறது.

## அரச நிதி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் விவகார அமைச்சுக்குட்பட்ட நிறுவனங்களின்பிரதானிகளுடன்நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சுக்கானநிதிஒதுக்கீட்டின்கீழ்செலவுகள் தொடர்பானபுள்ளிவிவரங்கள்இருந்தபோதிலும் அதன் மூலமான முன்னேற்றம் குறித்து முறையான கணக்காய்வு அவசியமென்றும், கூடிய விரைவில் உள்ளக கணக்காய்வுகள் நடத்தப்பட வேண்டுமென்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

பிரதமர் என்ற முறையில் எனது பொறுப்பிலுள்ள அனைத்து அமைச்சுகளிலும் இதுவரை நடக்க வேண்டிய மற்றும் முன்னெடுக்கப்படாத விடயங்களில் முன்னுரிமைகளை அடையாளம் கண்டு வருகிறேன். குறிப்பாக விளையாட்டுத்துறை அமைச்சில் பல விஷேட விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரச நிதி வீண் விரயம் மற்றும் துஸ்பிரயோகம் குறித்து ஆட்சியாளர்கள் என்ற வகையில் நாம் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகிறோம். அதேபோன்று செலவினங்களை கட்டுப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறோம். இதன் காரணமாக விழாக்கள், கொண்டாட்டங்களுக்காக செய்யும் வீண் விரயம் குறைக்கப்படவேண்டும்.

ஆளும்தரப்பிடமிருந்து பெற்ற நிதி மற்றும் செலவழிக்கப்பட்ட தொகைகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் அமைச்சிடம் உள்ளன. ஆனால் அந்த நிதி மூலம் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து இதுவரை எந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்படவில்லை. செலவு செய்யப்பட்ட பணத்தில் என்ன நடந்தது என்பதை உள்ளக கணக்காய்வின் ஊடாக கண்டறிய நடவடிக்கை எடுங்கள்.

விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகத்தில் நிகழும் முறைகேடு மற்றும் துஸ்பிரயோகம் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சிடம் குறிப்பிட்ட வேலைத்திட்டம் இல்லை.

இதன் காரணமாக துஸ்பிரயோகம் குறித்து விசாரணை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்தார்.

## ஈ - விசா....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயல்முறையை குடிவரவு அதிகாரிகள் இப்போது மீட்டெடுத்துள்ளனர், அதைக் கையாண்ட தனியார் கூட்டமைப்பு இந்த நடைமுறையில் இருந்து வெளியேற்றப் பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு பொறுப்பான வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தடயவியல் தணிக்கை நடத்தப்படும் என உறுதிப்படுத்தியுள்ளார்.

## பாடசாலை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் போன்ற விசேட நிகழ்வுகளுக்காகப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடுவது தொடர்பில் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெறுவதால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# சுத்தியலால் தாக்கப்பட்டு ஒருவர் பரிதாபக் கொலை

## சந்தேக நபர் கைது

குருணாகல், வாரியப்பொல, வல்பாலுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சுத்தியலால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

36 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

குருணாகல், வாரியப்பொல, வல்பாலுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்த திருடன் ஒருவன் பிடிப்பட்டுள்ளதாக 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த வீட்டிற்குள் சென்று பார்த்த போது பிடிப்பட்ட திருடன் கொலை செய்யப்பட்டிருப்பதை கண்டுள்ளனர்.

பின்னர், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கொலை செய்யப்பட்டவர் திருடன் இல்லை எனவும் அவர் சந்தேக நபரின் மனைவியுடன் தகாத உறவில் ஈடுபட்டிருந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சம்பவத்தன்று கொலை செய்யப்பட்டவர் சந்தேக நபரின் மனைவியை பார்ப்பதற்காக குறித்த வீட்டிற்கு சென்றுள்ள நிலையில் வீட்டிற்குள் மறைந்திருந்த சந்தேக நபர் அவரை சுத்தியலால் தாக்கி கொலை செய்துள்ளதாக விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கிய விவசாய கண்காட்சி

வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில், 'சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி,' எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண விவசாய பிரதிப்பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி, நான்காம் திகதி வெள்ளிக்கிழமை வரையிலான, மூன்று தினங்கள் கண்காட்சி நிகழ்வு இடம் பெறவுள்ளது.

முப்பதிற்கும் மேற்பட்ட விடயத் தலைப்புக்களை உள்ளடக்கியதாக இக் கண்காட்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (05)

# போதை மாத்திரைகளுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்கோ பிரதேசத்தில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

29 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 140 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# செப்ரெம்பர் 30க்கு முன்பாக வரி செலுத்தப்படவேண்டும்

## இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

வரி செலுத்தத் தகுதியான அனைவரும் 2023/2024 ஆண்டுக்கான வருமான வரியை செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த கால அவகாசத்துக்குள் வரி செலுத்தத் தவறினால் அபராதம் மற்றும் வட்டி அறவிடப்படுவதோடு, தள்ளுபடி செய்யப்படவோ குறைக்கப்படவோ மாட்டாது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, நிலுவையில் உள்ள அனைத்து இயல்புநிலை வரிகளையும் எதிர்வரும் ஒக்ரோபர் 30ஆம் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நினைவூட்டியுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற விரும்புவோர் 1944 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொள்ளலாம் அல்லது அருகிலுள்ள பிராந்திய அலுவலகத்துக்கு சென்று மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

(05)

# யானைகளின் அச்சுறுத்தல் அதிகரிப்பு ; கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

கஹட்டகஸ்திகிலிய ,கொன்வெள மற்றும் படரெல்லேவ ஆகிய கிராமங்களில் யானைகளின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

யானைகள் கிராமத்திற்குள் நுழைந்து பயிர்களை நாசம் செய்வதாகவும் இதனால் கிராம மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், பங்வெல்ல, தெகெதிபொத்தானை, கிம்புல்பெத்தியாவ, தெமடவெள போன்ற கிராமப்புறங்களில் இரவு பகலாக யானைகள் சுற்றித்திரிவதால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் பல வருடங்களாக அரச அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் அறிவித்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.(05)



# மொனராகலை - புத்தல வீதியில் கோர விபத்து; பாடசாலை மாணவர்கள் உட்பட நால்வர் காயம்

மொனராகலை – புத்தல வீதியில் ஹொரொம்புவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளார் என மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளையிலிருந்து மொனராகலை நோக்கிப் பயணித்த தபால் திணைக்களத்திற்கு சொந்தமான வான் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு ஓட்டோக்களுடன் மோதி பின்னர் பஸ் தரிப்பிடத்தில் இருந்த இரு பாடசாலை மாணவர்கள் மற்றும் தாயொருவர் மீது மோதி அருகிலிருந்த கடை ஒன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, ஒரு ஓட்டோவின் சாரதியும் இரு பாடசாலை மாணவர்களும் தாயொருவரும் காயமடைந்துள்ள நிலையில் மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த ஓட்டோ சாரதியின் உடல் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக அநுர மத்தேகொட தெரிவு

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக அநுர மத்தேகொடவும், பிரதித் தலைவராக ராசிக் சரூக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சத்துர கல்ஹேன தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கௌசல்ய நவரத்ன மற்றும் முன்னாள் பிரதித் தலைவர் நலிந்த இந்ததிஸ்ஸ ஆகியோர் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக செயலாளர் சத்துர கல்ஹேன மேலும் தெரிவித்துள்ளார்.

(05)

# சர்வதேச புத்தக கண்காட்சிக்கு ஜனாதிபதி அநுரகுமார வருகை







கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் சர்வதேச புத்தகக் கண்காட்சிக்கு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க சனிக்கிழமை வருகை தந்திருந்தார்.

இதன்போது, ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் புத்தக ஆர்வலர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் பல்வேறு புத்தகங்களை பார்வையிட்டார்.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த புத்தகக் கண்காட்சி செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணி முதல் இரவு 9 வரை நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# லுணுகலையில் சிறுமி மீது பாலியல் துஸ்பிரயோகம்

## சந்தேகநபர் கைது

சிறுமி ஒருவரை கடுமையான பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகலை, ஜன உதான கம்மான யப்பாம ஹொப்டன் பகுதியை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

5 வயதும் 6 மாதமும் கொண்ட சிறுமியே இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

இந்த சிறுமி தனது வீட்டுக்கு அயல் வீடான சந்தேக நபரின் வீட்டுக்கு விளையாடுவதற்காக செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

அப்போது சந்தேக நபர் கடந்த 23 திகதி இந்த சிறுமியை தனது வீட்டில் அறை ஒன்றுக்கு கூட்டிச் சென்று கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

அத்துடன் 23 ஆம் திகதி தொடக்கம் 4 நாள்களாக தொடர்ந்தும் இவ்வாறான குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார் என சிறுமி தாயாரிடம் கூறியுள்ளார்.

இதனை தொடர்ந்து குறித்த சிறுமியின் தாயாரால் வெள்ளிக்கிழமை லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதை தொடர்ந்தே சந்தேகநபர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சிறுமியின் தூரத்து உறவு முறையில் சித்தப்பா என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரை சனிக்கிழமை பசறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2024இல் வெளியிடப்பெற்றது